28th August 1961]

SRI K. R. NALLASIVAM : இந்த எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடுவதற்கு சர்க்கார் என்ன தேவைகளை எதிர்பார்க்கிறார்கள்? எந்த அடிப்படையில்?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒவ்வொரு வருஷத்திற்கும் சில எக்ஸ்பிரஸ் பஸ்கள் கட்டி முடிக்கப்படுகின்றன. அப்படி கிடைக்கும் பஸ்களை முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள இடங்களுக்கு முதலில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆகவே, அந்தந்த ஊர், இடம், ப்ரையாரிடி ஆகியவைகளைப் பார்த்து, அந்த அடிப்படையில் கொடுத்துக்கொண்டு வருகிறோம்.

SRI M. KALYANASUNDARAM : அமைச்சர் அவர்கள் சேலத்திற்கு மூன்று பஸ்கள் விடுவது பற்றி யோசிக்கப்படும் என்று சொன்னார்கள். அப்படி விடப்படும் பஸ் சேலத்திற்கு தர்மபுரி வழியாகச் செல்ல வேண்டுமென்று சொல்லப்பட்டது. அப்படி விடுவதற்குக் கஷ்டமாக இருந்தால், மேட்டூர் வரைக்கும் விடுவதற்கு அதாவது சென்னை-மேட்டூர் வரை பஸ் விடுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த ஆலோசனையை டைரக்டர் அவர்களுக்கு எழுதி அனுப்பினால், மற்றவைகளோடு பரிசிலனை செய்வார்கள்.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், இப்போது கேட்கும் மார்க்கம் மிக முக்கியமானது என்ற காரணத்தினால், சேலத்திற்கு இரண்டு பஸ்கள் விடப்பட்டாலும், இப்போதுள்ள இரண்டு ரயில் மார்க்கங்கள் அதாவது மொரப்பூர்-சேலம் 72 மைல் தொலைவுக்கும், திருப்பத்தூர்-கிருஷ்ணகிரி 26 மைல் தொலைவுக்கும் இடையே ரயில் நிற்காமல் செல்வதால் அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த பஸ் மார்க்கத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து ஜோலார்பேட்டை, சூரமங்கலம் வழியாகச் செல்வதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : This is only a request. It is not an interpellation.

*Sugar factory workers (Wages)*

* 1457 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the steps taken by the Government for ensuring the implementation of the recommendations of the Sugar Wage Board by the sugar factories in the State; and

(*b*) whether a separate Committee would be constituted for determining the wages and service conditions of the farm-workers attached to the sugar factories?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Government convened a Conference of the representatives of the workers and managements of the sugar factories on 22nd June 1961 and

[28th August 1961

discussed the question of implementation of the recommendations of the Sugar Wage Board. The managements have agreed to implement the decisions of the Conference in regard to the Wage Board recommendations.

(*b*) No, Sir.

**SRI M. KALYANASUNDARAM :** *இன்னும் எதாவது பாக்டரிகளிலே அமுல் நடத்தப்படாமல் இருக்கிறதா ? அப்படியானால் எந்தப் பாக்டரி ?*

**THE HON. SRI R. VENKATARAMAN :** - *அமுல் நடத்தவில்லை என்ற புகார் சர்க்காருக்கு வரவில்லை.*

**SRI M. KALYANASUNDARAM :** *குமாஸ்தாக்களுக்கும், இன்னும் திறமையான தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய சம்பளம் இன்னும் நிர்ணயம் செய்யப்படவில்லை என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படி தெரிந்திருந்தால் நடவடிக்கை எடுக்கப்படுமா ?*

**THE HON. SRI R. VENKATARAMAN :** *அமைச்சருக்குத் தெரியாது.*

*Building Co-operative Society (Government Transport Workers)*

* 1458 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there has been any defalcation and avoidable loss recently in the Building Co-operative Society of the Government Transport workers in Madras; and

(*b*) if so, the action taken in the matter?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The matter is under investigation.

(*b*) The matter has been placed in the hands of the Police authorities for necessary action. The Chief Promoter of the Society has been dismissed from service.

SRI T. S. RAMASWAMI : May I know when this defalcation happened? May I also know the amount involved and also the amount of subscriptions given by the workers of the society?

THE HON. SRI R. VENKATARAMAN : It is stated that the promoter collected Rs. 37,595, out of which he transferred Rs. 18,178 to the accounts of the Co-operative Thrift and Credit Society. Without further investigation, it is not possible to give the exact figures.

**SRI S. M. ANNAMALAI :** *ஸார், சீப் ப்ரமோட்டர் மட்டும் தான் டிஸ்மிஸ் செய்யப்பட்டு இருக்கிறாரா ? அல்லது ஒரு கிளார்க் அந்த சொஸைடியின் செக்ரடரியாக பணியாற்றியவரும் டிஸ்மிஸ் செய்யப்பட்டு இருக்கிறாரா ? அங்கு செக்ரடரியாக பணியாற்றுபவரும் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால் எது உண்மை ?*